**அ.வ.எண்: 77/2022 நாள்: 12.11.2025**
வா.சா.2 – உமா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவா வழக்கில் தரப்பினராக உள்ளேனா என்றால் உள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவரின் தம்பி காணாமல் போய்விட்டார். அவர் இறந்ததாக அறிவிக்க கோரி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன். காணாமல் போனவரின் பெயர் என்ன என்றால் வெங்கடாசலம் என்கின்ற மருதவாணன். அவர் எந்த தேதியில் காணாமல் போனார் என்றால் 10.01.2008 அன்று காணாமல் போனார். மேற்படி வெங்கடாசலம் என்கின்ற மருதவாணன் காணாமல் போன பிறகு என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் காவல்துறையில் புகார் அளித்தோம். எந்த தேதியில் புகார் அளித்தோம் என்றால் 2009 ஆம் வருடம் புகார் அளித்தோம். தேதி மாதம் நினைவில் இல்லை.
2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்களை யார் கூறியது என்றால் என் மாமியார் கூறினார். நான் தாக்கல் செய்த நிரூபன வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்க்காமல் தான் கையெழுத்து

செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 10.01.2008 அன்று என் கணவரின் சகோதரர் காணாமல் போனதாகவும், அதைத்தொடர்ந்து என் மாமனார் 06.08.2009 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவரின் சகோதரர் காணாமல் போனதற்கும் அது தொடர்பாக புகார் அளித்ததற்கும் இடையில் 20 மாத காலதாமதம் உள்ளது. அதன் காரணம் குறித்து எனது நிரூபண வாக்குமூலத்திலோ வழக்குரைலோ குறிப்பிட்டுள்ளேன்னா என்றால் குறிப்பிடவில்லை.

3. தாவா வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் எனது கணவரின் சகோதரர் 14 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போய்விட்டார் என்றும் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றும், அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்ற விஷயம் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் எதற்காக தாவா பரிகாரம் கேட்டு உள்ளேன் என்றால் என் கணவர் மற்றும் அவர் சகோதரரின் பெயரில் இடம் வாங்கியுள்ளோம். அதில் புறவழிச்சாலை வருவதால் பணம் தருகிறார்கள் என் கணவருக்கான பணம் வந்துவிட்டது. என் கணவரின் தம்பி காணாமல் போனதால் அவருக்கான பணம் இன்னும் வரவில்லை அதற்காக தாவா பரிகாரம்

கேட்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

4. மேற்சொன்ன விபரங்களை நான் தாவா பிராதில் குறிப்பிட்டுள்ளேன்னா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது போல் மேற்சொன்ன விபரங்களை குறிப்பிடவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் என் கணவரின் தம்பி இறந்தது குறித்து புகார் தாக்கல் செய்ய ஏற்பட்ட 20 மாத கால தாமதத்தை விளக்கும் பொருட்டு எந்த ஒரு காரணமும் சொல்லாததால் 1 முதல் 3 பிரதிவாதிகள் நாங்கள் தாக்கல் செய்த மனுவை நிராகரித்தார்கள் என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் தவா வழக்கு 1 முதல் 3 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2025.11.12 15:34:09 +0530